மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியதுபோல துறையின் மூலமாக ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு, மேற்கொண்டு ரூ.5 இலட்சம் நிதியை பொது மக்களின் பங்களிப்போடு பெற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.*

திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தேர் புனரமைத்துத் தரப்படும் என்று வாக்குறுதி அளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், அத்திருக்கோயிலுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கடந்த ஆட்சிக் காலத்தில்தான் குடமுழுக்கு செய்யப்பட்டது. அதனையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பார்களா என்று கேட்டு, மீண்டும் இந்த வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களுடைய மலர்ப் பாதங்களைத் தொட்டு வணங்கி, தொகுதியினுடைய மக்கள் சார்பாகவும் வணங்கி, நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 468, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

468—

வீட்டுமனைப் பட்டா

***14583—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2013 மே 10]

மேலூர் தொகுதி, அழகர்கோவில் பகுதியில் வசிக்கும் நரிக்குறவர் இன மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன்.

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், கிடாரிப்பட்டு கிராமத்தில் சர்வே எண் 676/5, 677/2 மற்றும் 677/5–ல் உள்ள புலங்களில் நரிக்குறவர் இன மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்கின்றபோது மேற்படி நபர்கள் இப்புலங்களில் வீட்டுமனைப் பட்டா பெற விருப்பம் இல்லை என மறுப்பு தெரிவித்ததன் காரணத்தினாலே அவர்களுக்கு மாற்று இடம் தேர்வு செய்து விரைவில் வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதியில், கள்ளழகர் திருக்கோயில் அடிவாரத்தில் இருக்கின்ற நரிக்குறவர் இன மக்களுக்கு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே பட்டா வழங்க வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். நரிக்குறவர் சமுதாய மக்களைப் பொறுத்த அளவில், நம்மோடு இணைந்து வாழ்வதற்கு ஒரே காரணம், நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும், மண்ணை விட்டு மறைந்தாலும் மக்கள் மனதை விட்டு மறையாமல் இருக்கின்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும்தான், நரிக்குறவர் சமுதாய மக்கள் மனிதர்களாக வாழ்வதற்கு ஒரு முன்னுதாரணத்தை எடுத்துக் காட்டியவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி). ஒரே ஒரு திரைப்படம் மூலமாக, ஒரே ஒரு பாடல் மூலமாக அந்தச் சமுதாயம் இன்றைக்குத்

தலைநிமிர்ந்து நிற்கக்கூடிய அளவிற்கு உருவாக்கியவர் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், கடந்த காலங்களிலெல்லாம் அடிப்படை வசதி இல்லாத காரணத்தினால், கிராமப்புறங்களில் இருக்கின்றவர்களெல்லாம் நகர்ப் பகுதியை நாடி வருவார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இன்றைக்கு நகர்ப்புறத்தில் இருக்கின்றவர்களெல்லாம் கிராமங்களில் குடியேறிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குக் காரணம், அடிப்படை வசதி. பள்ளிக் கட்டட வசதி, நல்ல தரமான ஆசிரியர் வசதி, கிராமங்களிலே ரோடு வசதி, குடிதண்ணீர் வசதி, வீடுகள், விலையில்லாத பொருட்கள் இப்படி வழங்குகின்ற காரணத்தால், நகர்ப்புறங்களில் இருக்கின்றவர்களெல்லாம் (மேசையைத் தட்டும் ஒலி) கிராமத்திற்குச் சென்றால், அதிக நன்மைகள் கிடைக்கும் என்று சொல்லக்கூடிய அளவுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே இன்றைக்குக் கிராமப்புறங்கள் வளர்ச்சி அடைந்திருக்கின்றன. அப்படிப்பட்ட வேளையில், இந்த நரிக்குறவர் சமுதாய மக்களின் உடம்பைக் கிழித்துப் பார்த்தால்கூட, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய எண்ணமும், நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய எண்ணமும்தான் அவர்களுடைய இதயத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

நான்கூட வேறு இடத்திலே நிலம் பார்த்தேன். ஆனால், அவர்களைப் பொறுத்தவரையில், அழகர்கோவில் என்பது சுற்றுலாப் பயணிகள் வரக்கூடிய இடமாக இருப்பதால், அந்த இடத்திலே அவர்கள் கடைகளை வைத்து பிழைத்துக்கொண்டிருக்கிறார்கள். வேறு இடத்திலே அவர்கள் வீடு கட்டி, அங்கிருந்து பிழைக்க முடியாது. ஆகையால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, அதே அழகர்கோவில் பகுதியிலேயே, தனியார் நிலத்தைக் கையகப்படுத்தலாம் இல்லையென்றாலும், கோயிலுக்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் மலை அடிவாரத்தில் இருக்கின்றன. அந்த இடத்திலேயே அவர்களுக்குப் பட்டா கொடுத்தால்தான், அவர்கள் அங்கு குடியிருந்துகொண்டு வியாபாரத்தைச் செய்ய முடியும்.

2013 மே 10]

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே அவர்களுக்கு ரேஷன் கார்டு வழங்கப்பட்டுள்ளது. அங்கு 150 குடும்பங்கள் குடியிருக்கின்றன. 150 ரேஷன் கார்டுகள் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய திட்டமான விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறி அனைத்தும் அவர்கள் வாங்கிவிட்டார்கள். அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமையும் இருக்கின்றது. அனைத்தும் அவர்களுக்கு அழகர்கோவிலில்தான் இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகையால், அந்த அழகர்கோவில் ஊராட்சிக்குட்பட்ட, அழகர்கோவில் மலை அடிவாரத்திலேயே அவர்களுக்குப் பட்டா கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நரிக்குறவர் சமுதாயத்தைப் பொறுத்தவரையிலே "குடிசையெல்லாம் வீடாகும் நேரத்திலே நாங்கள் தெருவோரம் குடியேறத் தேவையில்லே; சர்க்காரு ஏழை பக்கம் இருக்கையிலே நாங்கள் சட்ட திட்டம் மீறி இங்கு நடப்பதில்லே" (மேசையைத் தட்டும் ஒலி) என்று ஆனந்தமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் இன்றைக்கு ஆனந்தப் பாட்டு பாடிக் கொண்டிருக்கின்றார்கள். ஏனென்று சொன்னால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்ற பின்னாலேதான், இந்த இரண்டு வருட காலத்திலே 2,53,000 இலவச வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கி சாதனை படைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னாலே, மூன்றாவது ஆண்டான இந்த ஓர் ஆண்டு மட்டும், இரண்டு இலட்சம் பட்டாக்களை வழங்க வேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இலக்கு நிர்ணயித்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற மேலூர் வட்டம், கிடாரிப்பட்டு கிராமத்தைப் பொறுத்தவரையிலே அரசு புஞ்சை

[2013 மே 10

தரிசு நிலம் அங்கு இருக்கின்றது; அந்த இடத்திலே பட்டா வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால், அந்த இடம் அவர்களுக்கு சரியான இடமாக அமையாத காரணத்தாலே, அவர்கள் ஏற்க மறுத்துவிட்டார்கள். ஆகவே, அழகர்கோவில் பகுதியிலே வசிக்கிற நரிக்குறவர் இன மக்களுக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, உடனடியாக மாற்று இடம் தெரிவு செய்யப்பட்டு, இந்த ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரண்டு இலட்சம் பட்டாக்கள் வழங்குவதற்கு இலக்கு நிர்ணயித்திருக்கின்ற அடிப்படையிலே அந்த இடத்திலே வருவாய்த் துறையின் மூலமாகப் பட்டா கொடுப்பதற்கான நடவடிக்கையை விரைந்து எடுத்து, அந்தப் பகுதிவாழ் நரிக்குறவர் இன மக்களுக்கு உடனடியாக பட்டா வழங்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.*

திரு. ஆர். சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நரிக்குறவர் இன மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்ற எனது கோரிக்கையை, உடனடியாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கருணைப் பார்வைக்கு எடுத்துச் சென்று, இந்த ஆண்டு பட்டா வழங்கப்படும் என்று அறிவிக்கச் செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், அறிவிப்புச் செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.*

*[**குறிப்பு:** ஒர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*